தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-12-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் ஃபுட் எக்ஸ்புளோர்'17

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உணவு பதன்செய் பொறியியல் பிரிவு மாணவர்களின் சார்பில் தேசிய அளவிலான ஃபுட் எக்ஸ்புளோர்'17 என்ற கருத்தரங்கம் "விவசாயத்தை தொழிற்சாலைகளுடன் ஒன்றிணைப்பது - உணவுத் தொழில்நுட்பத்தில் பொறியாளர்களின் எழுச்சிப் பங்கு" என்ற தலைப்பில் நடைபெற்றது.

தேசிய அளவில் உணவுத் துறையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான மாணவர்களின் அறிவாற்றலையும் செயலாற்றலையும் வெளிக்கொணரும் வகையில் நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கை, ஈரோடு உழவன் உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட் இயக்குநர் வெங்கடேஸ்வரன், பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கே. ராமசாமி மற்றும் முதல்வர் எஸ். வி. கோட்டீஸ்வரன் தொடங்கி வைத்தனர்.

சிறப்பு விருந்தினரான வெங்கடேஸ்வரன் அவர்கள் உணவுத் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கூறினார். மேலும், வேளாண் துறையில் இணைய வணிகத்தின் செயல்பாடுகளைக் கூறி கருத்தரங்க மலரை வெளியிட்டார்.

பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கே. ராமசாமி தனது தலைமையுரையில், மாறும் வேளாண் வர்த்தக நிலை பற்றியும் உணவு பாதுகாப்பு மற்றும் சத்துணவை உறுதி செய்வதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பற்றியும் விளக்கினார்.

இக்கருத்தரங்க துவக்க விழாவில் உணவு பதன்செய் மற்றும் வேளாண் பொறியியல் துறையின் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் எஸ். கணபதி உடனிருந்தார்.

முன்னதாக மாணவி செல்வி.தண்முகி துவக்கவுரை ஆற்றினார். இறுதியாக மாணவன் செல்வன். நவீன் நன்றியுரை ஆற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்